தாத்தையங்கார்பேட்டை ஊராட்சி ஒன்றியம்
எம்.புதுப்பட்டி ஊராட்சி செயல் அலுவலர் / ஊராட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை திரு.எஸ். சரவணன்,

ந.க. ஊ-வ/ 07 /2022 நாள்: 10/10/2022

பொருள் : **மனை இறுதி ஒப்புதல் அனுமதி :** தா.பேட்டை ஊராட்சி ஒன்றியம் - எம்.புதுப்பட்டி ஊராட்சியில் எம்.புதுப்பட்டி (கிழக்கு) கிராமத்தில் புல எண்: **180/1AB,180/1AC,180/1AD,180/1R,180/2A2B ல்6466.62** ச.மீ பரப்பளவு உள்ள உத்தேச குடியிருப்பு இடத்திற்கு இறுதி மனை ஒப்புதல் தொடர்பாக அங்கீகாரம் வழங்கி உத்தரவிடுதல் தொடர்பாக

பார்வை:
1. திருத்தப்பட்ட ஊராட்சிகள் சட்டம் 1994 மற்றும் அரசாணை எண்:255 நாள்: 18-08-1997
2. திருமதி. நளினி க-பெ கார்த்திகேயன் - எண்: 34-MKSநகர் பிள்ளையார்பாளையம் அவர்களின் விண்ணப்பமனு-நாள்: **15-09-2022.**
3. நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் - திருச்சிராப்பள்ளி அவர்களின் இணைய கோப்பு எண்: **TRY-SWP-SVVSH9EJ/2652/2022/** நாள்: **23/09/2022** மற்றும் மனை வரைபட அனுமதி எண்: ம.வ/ந.ஊ.இ.இ (திமா) எண்: **117/2022.** நாள்: **23-09-2022**
3. எம்.புதுப்பட்டி ஊராட்சி கிராம சபை தீர்மான எண்: **176/2022** நாள்: **02/10/2022**

****** ****** ******

உத்திரவு:

தாத்தையங்கார்பேட்டை ஊராட்சி ஒன்றியம், எம்.புதுப்பட்டி ஊராட்சியில் எம்.புதுப்பட்டி கிழக்கு கிராமத்தில் புல எண்: **180/1AB,180/1AC,180/1AD,180/1R, 180/2A2B ல் 6466.62** ச.மீ பரப்பளவு உள்ள உத்தேச குடியிருப்பு மனை ஒப்புதல் தொடர்பாக நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் -திருச்சிராப்பள்ளி அவர்களின் இணைய கோப்பு எண்: **TRY-SWP-SVVSH9EJ/2652/2022/** நாள்: **23/09/2022** உத்திரவின்படியும் மற்றும் மனைவரைபட அனுமதி எண்: **117/2022** நாள்: 23-09-2022 என எண்ணிடப்பட்டு அனுமதி வழங்கப்பட்டதற்கு எம்.புதுப்பட்டி ஊராட்சி கிராமசபை தீர்மான எண்: **176** நாள்: **02/10/2022** ன் படி மனுதாரரால் தொகை எம்.புதுப்பட்டி கிராம ஊராட்சியின் பல்வகை ரசீது எண்: **006352** நாள்: **10/10/2022** ன்படி தொகை ரூபாய்: **78819/** செலுத்தப்பட்டுள்ளது. அதன்படி கீழ்கண்ட நிபந்தனைக்கு உட்பட்டு எம்.புதுப்பட்டி கிழக்கு கிராம புல எண்: **180/1AB,180/1AC,180/1AD,180/1R,180/2A2B** சதுரமீட்டரில் 42 (நாற்பத்தி இரண்டு) மனைகளுக்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. மேற்படி மனை உட்பிரிவில் உள்ள ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட பொதுச்சாலையினை/பொது இடத்தினை இதன் பின்னர் விற்பனை செய்வதோ, வேறு வகையில் வில்லங்கம் ஏற்படுத்த கூடாது.

2. மேற்படி மனை உட்பிரிவில் உள்ள மனைகளை குடியிருப்பு பயன்பாட்டிற்கு மட்டும் பயன்படும் வகையில் விற்பனை செய்யவேண்டும், தொழிற்சாலை அமைத்தல் போன்ற வேறு வகை பயனுக்கு விற்பனை செய்யக்கூடாது.

3. மனை உட்பிரிவு செய்யப்படும் இடத்தில் TNEB கம்பங்கள், வயர்கள் ஏதேனும் இருந்தால் அவைகள்பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாதவாறு மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

4. மழைநீர் வடிகால் அமைப்புகள், சாலை வசதிகள், தெருவிளக்கு வசதிகள், குடிநீர் வசதிகள், அகியவைகள் முறையாக தங்கள் செலவில் அமைப்பதுடன் சாலையின் பக்கவாட்டில் அமைக்கப்பட்டு மழைநீர் செல்ல ஏதுவாக இருக்க வேண்டும்.

5. இடம் தங்களுக்கு சொந்தமானதாக இருக்க வேண்டும். இது சம்பந்தமாக நீதி மன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் எம்.புதுப்பட்டி ஊராட்சி மன்றம் / செயல் அலுவலர் மற்றும் ஊராட்சித்தலைவர் ஏதும் பொறுப்பாகாது.

6. அங்கீகாரம் பெற்ற மனைஉட்பிரிவு பிளானுக்கு மாறுதல் இல்லாமல் இருக்கவேண்டும். மாறுதல் செய்வதாக இருந்தால் முன் அனுமதி பெற்று மாறுதல் செய்ய வேண்டும்.

7. அரசாணை எண்:255 நாள்: 18-08-1997-ன்படி கூராய்வு கட்டணம், நில பயன் மாற்று கட்டணம், வளர்ச்சிக்கட்டணம் ஆகிய இனங்கள் தணிக்கை மற்றும் ஆய்வில் நிதியிழப்பு என்று தெரிவிக்கப்படும் போது இழப்புத்தொகை,கட்டணத்தொகை செலுத்தக்கோரும் பட்சத்தில் மனை இறுதி ஒப்புதல் வழங்கப்பட்ட பின் மேறக்கண்ட தொகையினை நிபந்தனைக்குட்பட்டு செலுத்த வேண்டும்.

8. மனை இறுதி ஒப்புதல் வழங்கப்படும் மேற்கண்ட அங்கீகாரம் பெற்ற பிளானுக்கு வழங்கப்பட்ட ஆவணங்கள்/ ஏனைய ஆதாரங்கள் உண்மைக்கு மாறாக இருக்கும் பட்சத்தில் அங்கீகாரத்தை ரத்து செய்திட ஊராட்சி மன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

S. Saran 10/10/2022

ஊராட்சி தலைவர் / செயல் அலுவலர்,
எம்.புதுப்பட்டி கிராம ஊராட்சி
தா.பேட்டை ஊராட்சி ஒன்றியம்.

பெறுநர்:

திருமதி. நளினி க-பெ கார்த்திகேயன்
எண்:34 MKS நகர்-
பிள்ளையார்பாளையம்,
முசிரி வட்டம், திருச்சி மாவட்டம். 621211

நகல்:

1. நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் - திருச்சிராப்பள்ளி
2. துணைபதிவு அலுவலர் - முசிறி
3. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஊராட்சி ஒன்றியம் - தா.பேட்டை